
# காஞ்சி

ஆசிரியர்
அண்ணாதுரை

மலர் 1 6.6.1965 இதழ் 43





விலை
20
காசு




கற்பனைக் கதைகள், கட்டுரைகள் சுவை அளிப்பன.

கற்பனை, இரு வகையினதாக அமைவதுண்டு.

ஒன்று, இப்படியெல்லாமா நடந்திருக்கமுடியும்; அறிவுக்குப் பொருந்திவரவில்லையே என்று எண்ணத்தக்கது. இதிலே சுவை இருந்தாலும், பயன் இல்லை. மாய மந்திரம், மேலுலக வர்ணனை இவைபற்றிய கற்பனை, படித்திட விந்தையாக இருக்கும்; பொருளும் பயனும் கிடைக்காது.

மற்றோர் வகையான கற்பனை, விந்தையாக இருப்பதுடன், இப்படி ஏன் இருக்கக்கூடாது, ஏன் இவ்விதம் நடந்திருக்கக்கூடாது? என்ற எண்ணத்தைக் கிளறிவிட்டு, சிந்தனைக்கு வேலைதந்து, புதிய ஆராய்ச்சிக்கு வழிகோலும்.

ஜூல்ஸ் வெர்னி, இத்தகைய சுவையுடன் பயன்தரும் கற்பனை ஏடுகள் பல எழுதியவர். அவரைப் பற்றிய குறிப்புகள் சில இங்கு தரப்பட்டுள்ளன.

உலகத்திலுள்ள பல அறிஞர்களாலும், விஞ்ஞானிகளாலும் மற்றும் பல துறைகளிலும் மேதைகளாக விளங்கியவர்களாலும் அன்றும் இன்றும் போற்றப்படுகின்ற ஜூல்ஸ் வெர்னி, 1828-ல் பிரெஞ்சுதேசத்தில் "நேன்டஸ்" என்ற ஊருக்கு அருகில் பிறந்தார். இவர் இளமையில் நல்ல அறிவுத்திறனும், அதைவிட நல்ல கற்பனைத்திறனும் பெற்றிருந்தார். அப்பொழுதே கதை எழுதுவதிலும் கட்டுரைகள் எழுதுவதிலும் ஆர்வம் கொண்டிருந்தார். தனது 18-வது வயதில் வெர்னி தந்தையால் மிகவும் வற்புறுத்தப்பட்டு பாரிசுக்கு சட்டப்படிப்புக்கு அனுப்பப்பட்டார். படிப்பை முடித்துவிட்டபிறகு 'பங்கு தரகர்' தொழிலில் இறங்கி, பெரிய காரியாலயத்தை நிர்வகித்து, பணம் படைத்தவராக மாறினார். இப்படி படித்த காலத்திலேயும் தொழில் செய்த காலத்திலேயும், "டியூமாஸ்" என்ற கதையாசிரியரும் வெர்னியும் சேர்ந்து எழுதிய ஒரு புத்தகம் சிறிதளவு புகழ்பெற்றது. முதன் முதல் அவர் தனியாக எழுதிய புத்தகமான, "ஒரு பலூனில் ஐந்து வாரங்கள்" என்பது, அவரை மிகவும் வருந்தச் செய்துவிட்டு, பின்பு அவரே எதிர்பாராத அளவுக்கு அவரைப் பிரபலமாக்கிவிட்டது.

அவர் எழுதிய அந்தப் புத்தகம் பதினைந்து முறை வெளியீட்டாளரால் திருப்பி அனுப்பப்பட்டு, வெர்னி வெறுப்புடன் அதைத் தீயிலிட நினைத்தபோது, மனைவியின் வற்புறுத்தலால் பதினாறாவது முறை அனுப்பப்பட்டு அந்தக் கடைசி வெளியீட்டாளர் அதை வெளியிட்டார். அந்தப் புத்தகம் விற்பனையிலேயும் புகழிலேயும் ஓங்கிற்று. அவர் எழுதிய இரண்டாவது புத்தகம் "பூமியின் மையத்துக்குப் பிரயாணம்" என்பதாகும்.

வெர்னி ஏராளமாகப் புத்தகங்கள் எழுதி எல்லா நாட்டிலுள்ளவர்களாலும் போற்றப்பட்டார். அவர் எழுதிய புத்தகத்திலேயே உலகத்தில் மிகப் பிரபலமடைந்தது. "80-நாட்களில் உலகத்தைச் சுற்றுதல்" என்பது. இது உலகத்தில் உள்ள முக்கியமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது.

வெர்னியை, மார்கோனி, ஆகஸ்டி பிகார்ட், ரைட் சகோதரர்கள் போன்ற விஞ்ஞானிகள், தங்களுடைய வழிகாட்டியாகக் கருதி, அவரிடம் மிக்க மதிப்பு வைத்தனர். வெர்னியின் கற்பனை வடிவங்கள், வெறும் ஆச்சரியப்படத்தக்கனவாக மட்டுமில்லாமல் ஆராய்ச்சி செய்து அரிய பொருள்களைக் கண்டுபிடிக்கத்தக்கனவாக உள்ளன என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

வெர்னி நாட்டுப் பற்றுள்ள பிரெஞ்சு தேசத்தவர் என்றாலும் அமெரிக்காவிடம் அதிகப் பற்றுள்ளவராக இருந்தார். வாஷிங்டன். ஆபிரகாம் லிங்கன் போன்றவர்களைத் தன்னுடைய தலைவர்களாகப் போற்றி வந்தார்.

வெர்னிக்கு ஒரு மகன் பிறந்தான். அந்த சமயத்தில் அவர் கையில் பணம் அதிகமாய் இருந்தது. அதனால் பாரிஸிலிருந்து, அமியன் என்ற நகருக்குச் சென்று அங்கே ஒரு பெரிய காலியான இடத்தை வாங்கினார். அதிலே ஒரு அழகான வீடு கட்டினார். அந்த வீட்டுக்கு மேலே கோபுரத்தைப்போன்றஅமைப்பைக் கட்டச் செய்தார். அந்த கோபுரத்துக்குக் கீழ் தனக்கென்று ஒரு தனி அறையை அமைத்துக்கொண்டார். அந்த அறை காண்பதற்கு கப்பல் தலைவனின் அறையைப்போல் அமைப்பைப் பெற்றிருந்தது.

வெர்னி தன்னுடைய அறையிலேயே காலத்தைக் கழித்தார். அந்த அறை தேசப் படங்களாலும். பல வகையான புத்தகங்களாலும் சூழப் பெற்றிருந்தது. அவர் அங்குள்ள புத்தகங்கள் ஒவ்வொன்றையும் ஆழ்ந்து படித்தார்.

வெர்னி எழுதிய உலகத்தைப் பற்றிய கட்டுரைகளைப் படிப்பவர்கள், அவர் உலகத்தில் சென்று காணாத இடங்கள் மிகச் சிலவாகவே இருக்கும் என்று நினைப்பர். ஆனால் அவர் தன் வாழ்நாளில் 30 வருடங்களைத் தன்னுடைய அறையிலேயே கழித்தார்.

வெர்னியின் கற்பனைகள் அப்படியே உண்மையாகிக்கொண்டு வந்தன. பிரெஞ்சு எழுத்தாளர்கள் இவர்மேல் பொறாமைகொண்டனர். இவரை ஏளனம் செய்தனர். ஆனால் இவையெல்லாம் அவருடைய புகழை மங்கச் செய்யவில்லை.

வெர்னியின் வாழ்க்கையில் அவருடைய இறுதி நாட்கள் அவருக்குத் துன்பகரமாய் அமைந்தன. உடல் நோயினால் மிகவும் பாதிக்கப்பட்டார். அவர் கடைசியாக எழுதிய புத்தகங்கள் பின்னால் வரப்போகும் சர்வாதிகாரிகளும், மன்னர்களும் நடத்தும் கொடுங்கோல் ஆட்சியைப் பற்றியே விளக்கியது.

கடைசியில் அவர் இவ்வுலகத்தை விட்டு விடைபெற்றபோது, அவருடைய சாவுச் சடங்கிற்கு உலகத்திலுள்ள பெருந்தலைவர்களும், அவர் மேல் பொறாமை அடைந்தவர்களும் கூட வந்தனர். வெர்னி உலகத்தில் உள்ளோர் உள்ளத்தில் இறவாப் புகழ் பெற்றார்.

✻

காஞ்சி

மலர் 1 6—6—65 இதழ் 43

# மணம் தேவை! நெடி அல்ல!!

ஆட்சிப் பொறுப்பிலுள்ள தலைவர் கூறுவதை உடனே ஆதரித்து விடவேண்டும் என்பது மட்டுமல்ல, அவருடைய பேச்சுக்கும் போக்குக்கும் அவரே கூட எதிர்பார்க்காத விரும்பாத அழுத்தமான காரணங்களை உருவாக்கி விடுவதையும், அந்தப் போக்கையும் பேச்சையும் எதிர்ப்பவர்களைத் தாக்கித் தீர்த்தாக வேண்டும் என்ற துடிப்புடன் நடந்துகொள்வதையும், சீடகோடிகள் மட்டுமல்ல, பொறுப்புடன் இருந்தாக வேண்டிய இதழ்களும், வாடிக்கையாக்கிக் கொண்டு விட்டன. சில இதழ்கள் இந்த முறையிலே எழுதும் வகையையும் வெளியிடும் படங்களையும் பார்க்கும் போது, அந்தத் தலைவர்களே விரும்பாத ஒரு எண்ணத்தை மக்கள் மனதிலே மூட்டிவிடுவதை அறிந்து கொள்ளலாம்.

அமெரிக்கக் குடிஅரசுத் தலைவர் ஜான்சன், அமெரிக்கா வருவதை ஒத்திப் போடும்படி லால்பகதூரைக் கேட்டுக்கொண்டார்; செப்டம்பரில் வரலாம் என்று குறிப்பிட்டிருந்தார். ஆயிரத்தெட்டுக் காரணம் காட்ட முடிகிறது என்றாலும், ஜான்சனுடைய போக்கு, அருவருப்பைத் தருவதுதான்; ஐயமில்லை.

லால்பகதூர் தமது பயணத்தை நிறுத்திக் கொண்டதுடன், இனி ஜான்சன் குறிப்பிட்ட செப்டம்பரில் அல்ல, தமக்கு வசதிப்படுகிற போதுதான் அமெரிக்கப் பயணம் பற்றி யோசிக்க முடியும் என்று அறிவித்தார்.

இதற்கு அவரையும் அவருடைய ஆட்சியையும் ஆதரிக்கும் சுவை மிக்க காரியத்தில் ஈடுபட்டுள்ள சில இதழ்கள்,

ஜான்சன் முகத்தில் கரி

லால்பகதூர் பதிலடி

என்பனபோன்ற பரபரப்பான தலைப்புகளிட்டுச் செய்திகளைத் தந்தன; கருத்துகளையும் வெளியிட்டன.

அமெரிக்காவிடம் நமக்கு உறவு எதற்காக? நமது பக்கம் — நியாயத்தின் பக்கம்—சேராமல், பாகிஸ்தானிடம் பரிவு காட்டும் நாட்டுடன் நமக்கு எதற்காகத் தொடர்பு? ரஷியாதான், காஷ்மீர் பிரச்சினை நாள் தொட்டு கட்சப் பிரச்சினை ஆரம்பமானது வரை, தொடர்ந்து நமது பக்கம் ஆதரவு காட்டி வருகிறது என்று வாதாடவும், ஆகவேதான் லால்பகதூர் அமெரிக்கா போகாமல் ரஷியா போகிறார் என்று விளக்கமளிக்கவும் முனைந்தன.

லால்பகதூர் ரஷியா செல்கிறார் என்றதனைக் கேட்டதும், ஜான்சன் துடிதுடித்துக் கீழே சுருண்டு விழுவது போலவும், ரஷியாவிலே 'அமோகமான' வரவேற்பு நடந்தது கண்டு, பீதி அடைந்தது போலவும் எழுதுவதிலும் படங்கள் போடுவதிலும் சுறுசுறுப்புக் காட்டின.

இப்படிப்பட்ட செய்திகளும் படங்களும், மக்களிடம் 'தெம்பு' உண்டாக்கும் என்பதற்காக வெளியிடப்படுகின்றன என்று அந்த இதழ்கள் சமாதானம் கூறும் சாமர்த்தியம் கொண்டன என்றாலும், அளவு சற்று அதிகமாகி விடுவதனால், மக்கள் மனதிலே ஒரு விதமான கருத்து அழுத்தம் பெற்றுவிடுமே, பிறகு நாமேதானே அந்தக் கருத்தை மாற்றியாக வேண்டும் என்பதனை உணர்ந்து கொள்வதிலே மந்தத்தனம் இருப்பது புரிகிறது.

ஜான்சனுடைய அறிவிப்பு வெளிவந்ததிலிருந்து, சில இதழ்கள் புகுத்திய கருத்துகளும் போட்டுக் காட்டிய படங்களும், பெரும் அளவுக்கு, அமெரிக்காவிடம் பொதுமக்கள் அருவருப்பு கொள்ளும்படிச் செய்து விட்டன.

காமராஜரே அல்லவா—அமெரிக்காவுடன் நமக்கு எதற்காக உறவு? ஏன் அங்கே போகவேண்டும்? நம்மை ஆதரிக்கிற நாடு ரஷியா—அங்குதான் போக வேண்டும்—அங்குதான் போகிறார் லால்பகதூர்—அதுதான் சரி — என்றெல்லாம் கேட்போர் மனதில் இனி அமெரிக்காவுடன் தொடர்பே இருக்காது—இருக்கத் தேவை இல்லை என்ற எண்ணம் எழும்படிப் பேசினார்!

இவ்வளவு சிரமப்பட்டு இவர்கள் எழுப்பியது என்ன ஆயிற்று? நிலைத்திடுகிறதா? முடியுமா?

லால்பகதூர், அமெரிக்கக் குடிஅரசுத் தலைவர் ஜான்சனுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

> பயணத்தை ஒத்திவைக்கும்படி முன்பு ஜான்சன் எழுதிய கடிதம் கண்டு தாம் கோபமோ வருத்தமோ கொள்ளவில்லை என்றும்,
>
> அதற்கான விளக்கம் கிடைக்கப் பெற்று, பயண ஒத்திவைப்புக்கான காரணத்தைப் புரிந்துகொண்டதாகவும்,
>
> இன்னும் சில மாதங்களுக்குப் பிறகு அமெரிக்கா வர இருப்பதாகவும்,
>
> ஒப்புக்கொண்டுவிட்ட வேறு அலுவல் காரணமாக, இப்போதைக்கு அமெரிக்கா வர இயலாதிருக்கிறது என்றும்,

லால்பகதூர் கடிதத்தில் கருத்தளித்திருக்கிறார்.

அமெரிக்காவிடம் அருவருப்பு மூளும்படி இதுவரை எழுதிவந்த அதே இதழ்கள், இனி தாமே மூட்டிவிட்ட அந்த எண்ணத்தைக் கலைத்திடுவதற்காக, கட்டுரை

ஜூலைத் திங்கள்
வெளிவருகிறது
'காஞ்சி'
ஆண்டு மலர்

களும் படங்களும் வெளியிடமுனையும் இதழ்களை நடத்துவதிலே காட்டப்படவேண்டிய திறமைக்கு இது தேவையாக இருக்கலாம். ஆனால், மிகப் பெரியதும். சிக்கல் நிறைந்ததுமான பிரச்சினைகளிலே இதழ்கள் இவ்விதமான விளையாட்டு நடத்துவது நல்லதுதானா என்பதனைப் பொறுப்புடன் சிந்தித்தாகவேண்டும். பொதுமக்களின் மனதிலே, எந்த நேரத்திலும் எதையும் புகுத்தலாம், விரும்பும்போது எதனையும் அவர்கள் மனதிலே இருந்து அப்புறப்படுத்திவிடலாம் என்று எண்ணுவது சரியுமல்ல, முறையுமாகாது, இயலாததாகவுமாகிவிடக்கூடும்.

நல்லவேளையாக இத்தகைய செய்திகளை வெளிநாட்டார் பார்த்துப் புரிந்துகொள்ள முடிவதில்லை, முயற்சிப்பதுமில்லை என்பதனால், வெளிநாடுகளுடன் கொண்டுள்ள தொடர்புகளில் பெரிய குந்தகங்கள் விளைந்துவிடவில்லை; ஆனால பொதுமக்கள மனதிலே வீணான குழப்பத்தையும், தேவையற்ற எண்ணத்தையும் உண்டாக்கிவிடுகின்றன.

இதழ்கள் சில இவ்விதமான போக்குடன் இருப்பது, பழைய சம்பிரதாயம்;

இவர் நமது ராஜா
இவர் மிக நல்லவர்

என்று பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பார்களே பாடம அதுபோன்றது.

இவர் நமது தலைவர்
இவர் மிக நல்லவர்
இவர் சொல்வதெல்லாம் நல்லது!
இவர் செய்வதெல்லாம் நல்லது!!

என்ற முறையில், 'லாலி' பாடிடும் முறை.

இது ஜனநாயக வளர்ச்சிக்கும் நல்லது அல்ல; பிரச்சினைகளை விளக்கி வைப்பதற்கு ஏற்ற முறையும் அல்ல.

எவரிடமும் அல்லது எந்தப் பிரச்சினையிலும் விருப்புவெறுப்பே கூடாது என்று கூறவில்லை; ஆனால் 'கரணம்' அடித்துக் கைதட்டுதல் வாங்கியாக வேண்டும் என்ற போக்கு கூடாது என்று மட்டுமே கூற வேண்டி இருக்கிறது.

இதழ்கள் நடத்துவோராகட்டும், மேடைகளில் முழக்கமிடுவோராகட்டும், தாம் ஆதரவளிக்கும் பிரச்சினைக்கும், தலைவருக்கும், பற்றுக்காட்டவும் மரியாதை தெரிவிக்கவும், கடமை இருக்கிறது. அதனைத் திறம்படச் செய்திடவேண்டும். ஆனால் அதற்காகத் தாவிக் குதித்திடத் தேவையில்லை; ஆவியே இதற்காகத்தான் வைத்துக்கொண்டிருக்கிறேன் என்று ஆர்ப்பரிக்கத் தேவையில்லை. மணம் தேவை, நெடி அல்ல! சுவை வேண்டும், சூடுமட்டும் அல்ல! பற்று காட்டவேண்டும், அதனை வேறு சிலரிடம் பகை கக்கியபடி இருப்பதன் மூலமாகத்தான் காட்டவேண்டும் என்பது இல்லை. தொட்டுத் துகிலுரிப்பேன், அல்லது தாளின்கீழ் விழுவேன்—என்று இரு போக்குகள் மட்டுமே கொள்ளமுடியும் என்று கருதுவது தவறு

ஜே! ஜே! — என்று கோஷம்போடத் தெரியும் — அல்லது தூ! தூ! என்று காரித்துப்பத் தெரியும்; இந்த இரண்டிலே எதனைச் செய்ய முனைந்தாலும், திறமையாக, பிறருடைய பாராட்டுதலைப் பெறுகிற முறையில் செய்திட வல்லவன் நான் என்று கூறிக்கொள்ளலாம்; அதிலே வெற்றிகூடக் காணலாம். ஆனால் மக்கள் கண்சிமிட்டியபடி புன்னகை உதிர்க்கிறார்களே பொருள் என்ன? இப்படித்தான் இயல்பு! எதிலே ஈடுபட்டாலும், இதன்றி வேறு எதிலேயும் என் மனம் நாடுவதில்லை, இது உறுதி, உறுதி, உறுதி என்று பேசும் போக்கு — என்று கேலி பேசிக்கொள்கிறார்கள் என்று பொருள்.

அவசரமான முடிவுகள் மேற்கொள்ளாதிருத்தல்,

ஆத்திரம் அருவருப்பு மூட்டியே ஆதரவை வெளிப்படுத்தவேண்டும் என்ற போக்கைக் கொள்ளாதிருத்தல்,

ஒரு முனையிலிருந்து மற்றோர் முனைக்குத் தாவிடும் இயல்பு கொள்ளாதிருத்தல்.

தெளிவு—துணிவு—கனிவு என்ற முறையில் தமது போக்கை அமைத்துக்கொள்ளுதல்,

ஆகியவை தேவை —அவர்களுக்காக அல்ல—நாட்டு மக்களின் சிந்தனை செம்மைப்பட்டு, செயலில் சீர் மிகுந்திட.

காட்டுக் குதிரையின் வேகம், வியப்பளிப்பதாக இருக்கும். ஆனால் எந்த வழி செல்கிறோம். இடர்ப்பாடு யாவை, ஏன் செல்கிறோம் என்பவைபற்றிய எண்ணமற்ற ஒரு வேகம்; பயன் இல்லை. பயிற்சி செய்விக்கப்பட்ட குதிரை, காட்டுக் குதிரையின அளவு வேகம் காட்டாது; ஆனால் அதனால் கிடைத்திடும பயன் அதிகம்.

எண்ணங்களின் இயல்பும், பேச்சின் போக்கும் கூட அப்படித்தான். பயிற்சி, பக்குவம் மிகுதியும் இருக்கவேண்டும். அப்போதுதான் பொருள் இருக்க முடியும்.

இம்முறையில் தனிப்பட்டவர்கள் கூட நடந்துகொள்ளவேண்டும் என்றாலும், இந்த முறையில் இதழ்கள் நடத்தப்படவேண்டியது மிகமிக முக்கியம— ஏனெனில் வாழ்வு பெருஞ்சுமை என்ற நிலையின் காரணமாகத் தாமாகச் சிந்தித்துப் பிரச்சினைகளை விளக்கிக் கொள்வதற்கான வாய்ப்பினைப் பெற்றிராத பல இலட்சக் கணக்கான மக்கள், இதழ்களின் துணைகொண்டு கருத்துக்களைப் பெறவும், போக்குகளை அமைத்துக் கொள்ளவும் முற்படுகின்றனர். அவர்களின் மனதிலே அதிர்ச்சியும குழப்பமும் மூண்டுவிடும்படி எழுதுவது நல்லதுமல்ல; எதிர்காலத்தை ஏற்றமுள்ளதாகவும் செய்திடாது. ●

அடுத்த இதழில்
அண்ணா
எழுதும்
"சோக்கி"
சுவைமிக்க சிறு கதை

தம்பி

# கங்காதீர்த்தம் [2]

ஏழைக்கு இதம் செய்திடவே செல்வவானிடம் பணம் ஆண்டவனால் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. செல்வவான்கள் 'தர்மகர்த்தாக்கள்' அவர்களிடம் சேர்ந்திடும் செல்வம் அவர்களுடைய சுகபோகத்துக்காக அல்ல என்ற கருத்தை, மெத்தக் கனிவுடன், கேட்போர் உள்ளம் உருகும் விதத்தில் எடுத்துரைத்தவர்களில் காந்தியாருக்கு நிகர் எவரும் இல்லை என்றே கூறலாம்.

பண்புகள் குறித்து எடுத்துரைத்த மேலோர் அனைவருமே இத்தகு கருத்தினை வலியுறுத்தி வந்தனர். இதனை மறுத்தவர் எவரும் இல்லை; அதுபோன்றே இதனை முழுக்க முழுக்க ஏற்றுக்கொண்டு அந்த நெறி நின்றவர்களும் இல்லை.

ஊசியின் காதுக்குள் ஒட்டகம் நுழைந்தாலும் நுழையலாம்,
செல்வவான் மோட்ச சாம்ராஜ்யத்தில் நுழைய முடியாது

என்ற அருள்மொழியை அறிந்து, ஒப்புக்கொண்டு, உள்ளம் உருக அதுபற்றிய உபதேசத்தைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் மேனாட்டினர்; அதன் காரணமாக அவர்கள் உடைமைகளைத் தேடிப்பெறுவது, உல்லாச வாழ்க்கையில் ஈடுபடுவது என்பவைகளை விட்டொழித்தனரா? இல்லை! உபதேசம் கேட்பது ஞாயிற்றுக்கிழமைகளில், உடைமைகளைப் பெற அலைவது மற்ற நாட்களில் என்று முறை வகுத்துக்கொண்டனர்!!


முற்றுந்துறத்தல், தன்னலம் மறுத்தல், பிறர்நலம் பேணுதல், ஊருக்குழைத்தல், ஈதலில் இன்பம் கண்டிடல், கூடி வாழ்தல் — இவைகளைப் போற்றிட எவரும் தவறியதுமில்லை; இவைகளின்படி ஒவ்வொருவரும் வாழ்ந்து சமூகத்தின் தன்மையை மாற்றி அமைப்பதிலே முழு வெற்றி கண்டவர்களும் இல்லை. சிலர் அந்த முயற்சிகளை மேற்கொண்டனர்; ஆனால் துவக்க காலத் தூய்மை, நாளாகவாகத் தேய்ந்து தேய்ந்து மாய்ந்தே போய்விட்டது; அநேகமாகத் துவக்கப்பட்டவைகள் பிறகு ஆதிக்க பீடங்களாக, மடாலயங்களாக மாற்றப்பட்டுவிட்டன.

இந்நிலை மேனாட்டில் மட்டுமா கீழ்நாடுகளிலுமா என்ற கேள்விக்கே இடமில்லை, எங்கும் இந்நிலை; அளவில், வேகத்தில், தரங்கள் இருக்கலாம், போக்கிலே ஒரேவிதமாகத்தான் இருந்தது.

ஏன் உபதேசங்களைப்பற்றி இப்போது கூறுகிறேன் என்று கேட்பாய் தம்பி! காங்கிரஸ் பேசிவரும் சோஷியலிசம், உபதேச பாணியில் இருக்கிறதல்லவா; அந்த உபதேசம் பலன் தராது. ஏனெனில் இன்றையக் காங்கிரஸ்காரர்களைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிகமான தூய்மையாளர்கள், இன்று இவர்கள் செய்வதைவிட மெத்த உருக்கத்துடன் செய்த உபதேசங்கள் யாவும், பூஜாமாடத்துக்கு உரிய ஏடுகளாய, பாடல்களுக்கான கருப்பொருளாய்ப் போய்விட்டன-ஏழை-பணக்காரன் எனும் பொல்லாங்கு மூட்டிவிடும் பேதத்தைப் போக்கவில்லை; போக்கிட முடியவில்லை!

அருளாளர் என்று விருது பெற்றோரின் உபதேச மூலம், ஏழையின் இன்னலைத் துடைத்திட முயன்று பார்த்து அது தக்கபலன் தராது போனது கண்டபிறகே, மேனாட்டு அறிவாளர்கள் சிந்தித்துச் சிந்தித்து, சோஷியலிசம் எனும் சமதர்ம முறையைக் கண்டறிந்து கூறினர்.

நல்ல இதயம், உயர்ந்த பண்பு இவைகளிலிருந்து எழுந்ததுதான் சோஷியலிச முறை என்றாலும் இதயம் நல்லதாக்கப்படவேண்டும் என்ற நல்லுரையே, சோஷியலிசம் காணும்



வழி என்று சோஷியலிசக் கருத்தளித்த வித்தகர்கள் கூறிடவில்லை.

அய்யோ பாவம்!
அவனும் மனிதன்!
ஏதோ செய்வோம்!
போகிற கதிக்கு நல்லது!
கொண்டு செல்லவா முடியும்!
கொடுத்தால் குறையாது!
ஒன்றுக்கு ஒன்பது கிடைக்கும்!

என்பனபோன்ற பேச்சுகளும், அவைகளுக்கான மனப் போக்கும் இன்று நேற்று ஏற்பட்டவை அல்ல, நெடுங் காலமாக இருந்து வருபவை.

இம்மைச் செய்தது மறுமைக்கு ஆகும் என்ற கருத்தை வலியுறுத்தி எழுதப்பட்ட கதைகளும், புனையப்பட்ட புராணங்களும், கொஞ்சமா!

தம்பி! ஊருக்கு ஒரு உபகாரமும் செய்தறியாதவனும் ஒருவன். அவன் இறந்து மேலுலகம் சென்றான் —படித்த கதையைச் சொல்லுகிறேன்; பார்த்ததை அல்ல!—அவன் இறந்தபோது, ஒருவருக்கு ஒரு உதவியும் செய்யாத இவன் நரகம்தான் செல்வான் என்று ஊரார் பேசிக்கொண்டனர் — ஆனால் அவனைத் தேவ தூதர்கள் பொன்னுலகம் கொண்டு சென்றனராம்— கணக்கு பார்க்கப்பட்டது—“இவனுடைய ஆள் காட்டி விரலுக்கு மாலை மரியாதைகள் நடத்தி இவனைச் சிறிது காலம் பொன்னுலகில் இருந்திடச் செய்திடுக! அனைவரும் இவனுடைய ஆள்காட்டி விரலைக் காணட்டும்; மகிழட்டும்; போற்றிப் புகழட்டும்” என்று தேவதேவன் கட்டளையிட்டானாம்.

காரணம் என்ன தெரியுமா, தம்பி! ஆசாமி ஒருவருக்கும் ஒருவிதமான உதவியும் செய்யாதவன் என்ற போதிலும், ஒருநாள் உச்சிப்போதில், கடுமையான பசியுடன் வந்த ஒருவன், இவனிடம் எந்த உதவியும் பெற முடியாமற்போகவே, இங்கு தர்மசத்திரம் எங்கே இருக்கிறது? அதையாவது காட்டுமே ஐயா! என்று கேட்டிட, ஆள்காட்டிவிரலை நீட்டி, சத்திரம் இருக்கும் பக்கத்தைக் காட்டினானாம். அந்தப் புண்ணிய காரியத்துக்காக, அவனுடைய ஆள்காட்டி விரலுக்கு அத்தனை மரியாதை!!

இவ்விதமான கதைகளைக் கூறியாகிலும் மற்றவர்களுக்கு உதவி செய்திடவேண்டும் என்ற எண்ணத்தை ஊட்டவேண்டும் என்று பலர் வெகுபாடுபட்டிருக்கிறார்கள்.

ஆனால் அத்தகைய உதவிகள், தான தருமங்கள், பாலைவனத்திலே தெளித்த பன்னீர்த் துளிகளாகிப் போயினவேயன்றி, பாலைவனத்து வெப்பத்தைப் போக்கிடவில்லை!

இதனைக் கண்ட பிறகுதான் பேரறிவாளர்,

மனிதன் வாழப் பிறந்தவன்,
எல்லாம், எல்லோருக்கும் என்றே உளது,

என்ற அடிப்படையை எடுத்துக் காட்டி சோஷியலிசத்தை உருவாக்கினர்.

சோஷியலிசமே போதுமான பலனைத் தரவில்லை, தத்தித் தத்தி நடக்கிறது, தடுமாறிக் கீழே விழுகிறது என்று கூறி, அடித்து நொறுக்கிப் பிறகு புது வார்ப்படம் காண்பதுபோல, புரட்சி நடாத்திப் புதுமுறை காணவேண்டும் என்று கூறுகின்றனர் பொதுவுடைமை வாதிகள். ஆனால் இன்றையக் காங்கிரசோ, ஏழைக்கு ஏதேனும் உதவி செய்திடுக! என்ற பழைய பேச்சைப் புதுமுறுக்குடன் மேடைகளிலே பேசுகின்றனர்; அதனைச் சோஷியலிசத் திட்டம் என்று வேறு நம்பச் சொல்கின்றனர்.

வேலிகள் ஆயிரம் பட்டக்காரருக்கு, வாண்டையாருக்கு, மூப்பனாருக்கு, இராமநாதபுரத்தாருக்கு, நெடும்பலத்தாருக்கு, அவர் போன்றாருக்கு; அவர்களெல்லாம் நடத்திச் செல்லும் காங்கிரசிலே சோஷியலிசம் வேறு எப்படி இருக்க முடியும்?

மறைந்த மாமேதை நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன் நடித்துக் காட்டிய ஒரு காட்சி நினைவுக்கு வருகிறது—அதன் தொடர்பான கதை நினைவிலே இல்லை.

ஒரு இடத்தில், மாங்காய் மாலை கொடுக்கவேண்டி வருகிறது; மாங்காய் மாலை என்பது, பொன்னால் செய்யப்பட்ட மாங்காய் உருவ பில்லைகளில் கல்லிழைத்து, சரமாக்கி மாலையாகப் போட்டுக்கொள்ளும் விலை அதிகமுள்ள ஆபரணம்! இதைக் கொடுக்கவேண்டி வருகிறது; கொடுக்க வசதி இல்லை; அவ்வளவுக்குப் பணம் இல்லை!! எனவே ஒரு தந்திரம் புரிகிறார், நகைச்சுவையுடன்.

ஒரு ரோஜா மாலை, ஒரு மாங்காய் எடுத்துக் கொண்டு போய், இதோ மாங்காய், இதோ மாலை, மாங்காய் மாலை; வந்து கேட்டால் சொல்லிவிடுங்கள். மாங்காய் மாலை கொடுத்தாகிவிட்டது என்று, என்பதாகக் கூறிவிடுகிறார்.

அந்த ‘மாங்காய் மாலை’ போன்றது தம்பி! காங்கிரசார் இன்று பேசும் சோஷியலிசம்!! புரிகிறதா என்று கோபம் கொள்ளாத காங்கிரஸ்காரர்களைக் கேட்டுப் பார்.

இதனைக் கூறுவதால், உதவி செய்வது, தான தருமம் செய்வது கூடவே கூடாது என்று நான் சொல்லுவதாக எண்ணிக்கொண்டு விடக்கூடாது. சிலர் இருக்கிறார்கள், இந்த வாதத்தையே தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு, இந்தவிதமான உதவிகளைச் செய்வதாலே எந்தவிதமான உருப்படியான பலனும் ஏற்பட்டுவிடப் போவதில்லை, ஆகவே ஒருவருக்கும் ஒருவிதமான உதவியும் செய்யத் தேவையில்லை என்ற போக்கை மேற்கொள்பவர்கள்.

நான் சொல்ல வந்தது அத்தகைய எண்ணத்தை ஏற்படுத்த அல்ல. உதவி செய்வது சோஷியலிச

மாகாது; சோஷியலிசம் என்பது, புதிய சமூக அமைப்பு முறை, புதிய அரசியல் அமைப்பு முறை, புதிய பொருளாதார அமைப்பு முறை என்பதையும், அதனை நோக்கமாகக் கொண்டது அல்ல, காங்கிரஸ் கட்சி பேசிவரும் சோஷியலிசம் என்பதையும் கூறுகிறேன்.

மண் குதிரை மீதேறிக்கொண்டு ஆற்றில் இறங்குவது என்பார்களே அது போன்றது, காங்கிரஸ் பேசிவரும் சோஷியலிசம்.

காங்கிரஸ் பேசிவரும் சோஷியலிசம், தமது உடைமைகளை, ஆதாயம் தேடித்தரும் அமைப்புகளை, அதனால் கிடைத்திடும் ஆதிக்கத்தை எந்தவிதத்திலும் கெடுத்துவிடாது என்று நன்றாகத் தெரிந்திருப்பதாலேயே, இன்று எல்லாப் பெரியபுள்ளிகளும் காங்கிரசிலே இருக்கின்றனர். அவர்கள் என்ன ஏமாளிகளா! ஜாண் பணத்துக்கு முழம் புத்தி என்று கிராமத்திலே பேசிக்கொள்வார்கள்!!

உள்நாட்டு முதலாளிகள் மட்டுமல்ல, காங்கிரஸ் பேசிவரும் சோஷியலிசம் தங்கள் உடைமைகளையும் பணம் தேடும் உரிமையையும் ஒரு துளியும் பாதிக்காது என்ற அழுத்தமான நம்பிக்கை வெளிநாட்டு முதலாளிகளுக்கும், நிரம்ப ஏற்பட்டிருக்கிறது; கோடி கோடியாக 'முதல்' போடுகிறார்கள், புதிய புதிய தொழில்களிலே!

ஏழை எக்கேடோ கெடட்டும் என்ற போக்கில், வெள்ளைக்காரன் முதலாளித்தனத்தை வளர்த்து வந்தான் என்று கூறினோம். வெள்ளைக்கார ஆட்சி போனபிறகு, அவன் காலத்திலே ஏற்பட்டிருந்த முதலாளி ஆதிக்கம் ஒழிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லவா? கேட்டுப் பார், உண்மையை ஒளிக்காமல் பேசும் இயல்புள்ள காங்கிரஸ்காரர் எவரையாவது பார்த்து; எந்த அளவுக்கு வெள்ளைக்காரன் காலத்திலே அமைக்கப்பட்ட முதலாளித்தனம் ஒடுக்கப்பட்டிருக்கிறது என்று. தலையைக் கவிழ்ந்து கொள்வார்! ஏன்? ஒடுக்காதது மட்டுமல்ல, வெள்ளைக்காரன் காலத்திலே இருந்ததைவிட மூன்று மடங்கு அளவு வளர்ந்துவிட்டிருக்கிறது முதலாளித்தனம்–காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்–சோஷியலிசம் பேசும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்.

வெள்ளையராட்சி விலகும்போது 1947ல், இங்கு முதலாளிகள், தொழில்களில் போட்டிருந்த மூலதனம் 700 கோடி ரூபாய் என்று கணக்கெடுத்தனர்.

சுயராஜ்யம் அமைந்து சோஷியலிசம் மலர்ந்திருப்பதாகக் கூறுகிறார்களே, அதன் காரணமாக, முதலாளி தொழிலில் போட்டிருக்கும் பணம் குறைந்ததா? இல்லை. நாலு ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த கணக்கின்படி இந்தத் தொகை 1900 கோடி ரூபாயாக வளர்ந்துவிட்டிருக்கிறது.

இதுபோல, முதலாளிகளின் முகாம்களை வளர வைத்துக்கொண்டே, சோஷியலிசமும் பேச முடிகிறது காங்கிரஸ் கட்சியினால்! அந்த அளவுக்கு மக்களின் மதி மங்கிக் கிடக்கிறது என்று காங்கிரஸ் கட்சி நம்புகிறது.

வெள்ளையராட்சியின்போது கிடைத்ததைவிட அதிக வருவாய் இப்போது முதலாளிகளுக்குக் கிடைத்திருக்கிறது என்பதை எந்தக் காங்கிரஸ் தலைவரும் மறுத்திட முடியாது.

நான் குறிப்பிட்டேனே நாலு ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த கணக்கு—அதன்படி, தொழில் அதிபர்களுக்கு மத்திய சர்க்கார் வழங்கியுள்ள மானியம், சலுகை, கடன் ஆகிய வகையில் 590 கோடி ரூபாய் செலவாகி இருக்கிறது.




சோஷியலிசம் பேசும் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி, முதலாளிகளை ஊட்டி வளர்க்கிறது; கொழுக்க வைக்கிறது.

அதனாலே காங்கிரசுக் கட்சிக்கு என்ன இலாபம் என்று கேட்கமாட்டாய் — உனக்குத்தான் தெரியுமே தம்பி! போன பொதுத் தேர்தலின்போது முதலாளிமார்கள் காங்கிரஸ் கட்சிக்குக் கொடுத்த நன்கொடை, 98 இலட்ச ரூபாய் என்பது.

முதலாளித்துவ முறையைக் கட்டிக் காத்துக் கொண்டும், கொழுக்கவைத்துக்கொண்டும் இருக்கும் காங்கிரஸ்கட்சி எப்படி சோஷியலிசத்தின் உண்மைக் கருத்தின்படி நடந்துகொள்ள முடியும்? முடியாது!

காங்கிரசுக் கட்சியிலேயே சிலர் இப்போது, சோஷியலிசம் வளரத்தக்கவிதத்தில் காங்கிரசாட்சி நடந்துகொள்ளவில்லை என்று பேசத் தலைப்பட்டுள்ளனர்.

அமைச்சராவதற்கு முன்புவரை இந்திராகாந்தி இந்தக் கருத்தை வலியுறுத்தி வந்தார்கள். இப்போது எப்படியோ தெரியவில்லை.

இரு திங்களுக்கு முன்பு காங்கிரஸ் தலைவர்கள் சிலர் கூடி ஒரு காங்கிரஸ் சோஷியலிச மாநாடு நடத்தி, சோஷியலிசத் திட்டத்தை அக்கறையுடனும், தீவிரமாகவும் நிறைவேற்றும்படி காங்கிரஸ் ஆட்சியை வற்புறுத்திப் பேசினர்.

காங்கிரஸ்கட்சி, உள்ளபடி சோஷியலிசத்தின் வழி நடப்பதானால், சிலர்கூடி, ஏன் வற்புறுத்தவேண்டும்!! காங்கிரசுக் கட்சியிலேயே, சோஷியலிச வழி நடப்பதாகக் கூறும் ஒரு பிரிவும், சோஷியலிசவழி நடக்கவில்லை என்று குறைகாணும் ஒரு பிரிவும் இருக்கிறது. காமராஜர் இந்த இரண்டு பிரிவிலும் இருக்கிறார்!

தம்பி! சோஷியலிச தத்துவத்தின் அடிப்படை, தொழில்கள், உற்பத்தியைப் பெருக்கவேண்டும், அந்த உற்பத்தி மக்களின் வசதிகளை அதிகப்படுத்தப் பயன்படவேண்டுமே யன்றி, முதலாளிகளின் இலாபத்தைப் பெருக்கிடப் பயன்படக்கூடாது என்பதாகும்.

அதன்படி நடந்திருக்கிறதா என்பதைக் கண்டிட, ஒரு கணக்கினை ஆராய்வோமே!

இந்துஸ்தான் மோட்டார் கம்பெனி தெரியுமல்லவா —காங்கிரஸ் தேர்தல் நிதிக்கு 20-இலட்ச ரூபாய் நன்கொடை கொடுத்த அமைப்பு — அதனுடைய மூலதனம் 7-கோடியே 79-இலட்சமாம்.

அந்தக் கம்பெனிக்கு ஒரே வருடத்தில்—1960-ல்— கிடைத்த இலாபம், 2,85,71,127 ரூபாய் என்று கணக்குத் தந்திருக்கிறார்கள். பார்த்தனையா, காங்கிரசின் சோஷியலிசம் கொண்டுள்ள கோலத்தை!!

டாட்டா கம்பெனிக்குக் கிடைத்த இலாபம், 5-கோடியே 77-இலட்சமாம்!

ஒரிசா மாநிலத்தில் இருக்கிறதே—இப்போது அதன்பெயர் 'பாரதம்' முழுவதும் அடிபடுகிறதே, கலிங்கா கம்பெனி, அதற்கு ஒரேவருஷத்தில் கிடைத்த இலாபம் 26-இலட்சம்! இப்படி இலாபம் திரட்டிக் கொள்ள இடமளித்துவிட்டு, சோஷியலிசம் பேசுகிறது, காங்கிரஸ் கட்சி!

துரைத்தனமே அமைத்த ஒரு குழு, மக்களின் நிலைமை எப்படி இருக்கிறது என்பதையும் படம்பிடித்துக் காட்டியிருக்கிறது.

ஒரு நாளைக்கெல்லாம் ஒரு மணி நேரத்துக்கு மட்டுமே வேலை கிடைக்கிறதாம் — மற்ற நேரத்தில் வேலை தேடி அலைகிறார்கள் — கிடைக்காமல் திண்டாடுகிறார்களாம், 270-இலட்சம் மக்கள்! இந்த ஒருமணிநேர வேலையில் கிடைக்கும் கூலியைக்கொண்டு எப்படி வாழமுடியும்? வதைபடுகிறார்கள், அரைப்பட்டினியாக.

ஒரு நாளைக்கெல்லாம் இரண்டு மணி நேரத்துக்கு மட்டுமே செய்வதற்கு வேலை கிடைக்கிறது 200-இலட்சம் மக்களுக்கு.

ஒரு நாளைக்கு ஐந்தணா மட்டுமே கூலியாகப் பெற்று வாழவேண்டிய பரிதாபம் 600-இலட்சம் மக்களுக்கு; நாலணா பெறுபவர்கள் 400-இலட்சம். இவை, சர்க்கார் நியமித்த அமைப்பு கொடுத்துள்ள கணக்கு; நான் இட்டுக்கட்டியது அல்ல.

டாட்டா பிர்லா, கோடி கோடியாகக் குவித்துக் கொண்டிருப்பதும், குப்பனும் சுப்பனும் கூலி போதாமல் குமுறிக்கொண்டிருப்பதும், சோஷியலிசம் அல்ல!!

இத்தகைய பயங்கரமான பேதத்தைப் போக்குவதுதான் சோஷியலிசம்.

ஆனால் சோஷியலிசம் பேசும் காங்கிரசின் ஆட்சியில் மக்களிடையே காணக்கிடக்கும் பொருளாதார பேதம் விரிவாகிவிட்டிருக்கிறது; ஆழமாகியும் விட்டிருக்கிறது.

இதனை சர்க்காரே அமைத்த மகலனோபிஸ் குழுவினர் ஒப்புக்கொண்டுள்ளனர்.

ஏழை—பணக்காரன் பேதத்தைப் பயங்கரமான அளவு வளர்த்துவிட்டவர்கள், வளர்த்துக்கொண்டு வருபவர்கள், சோஷியலிசம் எமது திட்டம் என்றும் பேசுகிறார்கள்! விந்தையை என்னென்பது!

நானும் சைவன்தான்! என்று பேசினானாம், ஆட்டு இறைச்சியின்றி ஒருவேளை கூட இருக்கமுடியாதவன். வியப்பாக இருக்கிறதே! நீயா சைவன்? என்று கேட்டானாம் நண்பன்! ஆமாம்! அதிலென்ன சந்தேகம்! புல், பச்சைத்தழை இவைதானே ஆடு தின்கிறது; அதை நான் தின்கிறேன். என்றானாம் அது வேடிக்கைப் பேச்சு. காங்கிரஸ் ஆட்சியினர் முதலாளித்துவத்தை

வளர்த்துக்கொண்டே, சோஷியலிசம் பேசுகிருர்கள்; தங்கள் நாணயத்தை எவரும் சந்தேகிக்கக்கூடாது என்றும் கூறுகிருர்கள் — கூறுகிருர்களா!! கட்டளே யிடுகிருர்கள்!

இவ்விதம் பேசுவது காங்கிரசின் எதிரிகளின் போக்கு என்று கூறித் தப்பித்துக்கொள்ள முயற்சிப் பார்கள் காங்கிரஸ் தலேவர்கள்.

தம்பி! நான் எடுத்துக்காட்டிய இந்தக் கருத்துரை கள், பல காங்கிரஸ்காரர்களே பேசியவை.

உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு காங்கிரஸ் காரர் அன்சர் ஹர்வானி என்பவர். அவர் மனம் நொந்து பேசியிருககிருர்;

> சோஷியலிச வழியிலே காங்கிரஸ் அரசு செல்லவில்லேயே!
>
> கொள்ளே இலாபமடிக்கும் முதலாளி களின் கொட்டத்தை அடக்குவதற்குப் பதி லாக அவர்களுடன் கூடிக் குலவுகிறீர்களே! இது அடுக்குமா?
>
> வரிகொடுக்காமல் ஏய்க்கும் வணிகக் கோமான்கள் இருக்கிருர்கள்; அவர்களேப் பிடித்திழுத்துத் தண்டிக்காமல், அவர்களின் மாளிகைகளிலே விருந்துண்ணச் செல்கிறீர் களே! நியாயமா?

என்றெல்லாம் கேட்டிருக்கிருர்.

சோஷியலிசம்கூட அல்ல, காந்திய வழியிலே கூடச் செல்லவில்லேயே, முறையா? கைகூப்பி, மன் ருடிக் கேட்டுக்கொள்கிறேன், காந்திய வழியிலே நட வுங்களய்யா என்று காங்கிரஸ் ஆட்சியினரைக் கேட் டுக்கொள்கிருர் அகில இந்தியக் காங்கிரஸ் தலேவராக இருந்துவந்த தேபர்.

இவர்களின் மனக்குமுறலேயுமா, காங்கிரசாட்சி யினர் எதிர்க்கட்சியினரின் எரிச்சலூட்டும் பேச்சு என்று அலட்சியப்படுத்திவிடப்போகிருர்கள்!!

> சென்ற கிழமை கல்கத்தாவில் பேசிய மாளவியா எனும் காங்கிரஸ் தலேவர், நேரு மறைந்ததற்குப் பிறகு, காங்கிரசின் சோஷிய லிசப் பணி பின்னுக்குச் சென்றுவிட்டது என்று நிருபர்களிடம் கூறியிருக்கிருர்.

சோஷியலிசப் பாதையில் வேகமாக நடைபோடுவதாக இங்கு காமராஜர் முழக்கமெழுப்புகிருர். சோஷியலிசத் தில் இதுவரை இருந்து வந்த ஆர்வமும் மங்கிவிட்டிருப் பதாக மாளவியா கூறுகிருர். அவரும் காங்கிரஸ் காரரே! அவரைக் கண்டிக்கச் சொல்லுங்கள் பார்க் கலாம், காமராஜரை!! செய்யமாட்டார்!!

சோஷியலிசம்பற்றி இங்கு காமராஜர்கள் பேசும் போது மக்கள்,

> தனி முதலாளிகளின் கொட்டம் அடக் கப்படும், வருவாய்தரத்தக்க பெரிய தொழில் கள் பொதுத்துறைக்கு ஒதுக்கப்படும்.
>
> பொருளாதார பேதம் ஒழிக்கப்படும்; அல் லது குறைக்கப்படும்.
>
> தொழில்கள் வெறும் இலாபவேட்டைக் கூடங்களாக இனி இராமல், மக்களுக்கு வசதி தேடித்தரும் அமைப்புகளாகிவிடும்,
>
> ஓடப்பர் உயரப்பராகி எல்லோரும் ஒப் பப்பராகிடுவார்!

என்றெல்லாம் எண்ணிக் கொள்கிருர்கள். பாவம், அவர்கள் அறியார்கள் காங்கிரசின் சோஷியலிசம் அது அல்ல என்பதனே.

சோஷியலிசம் பேசுகிருர்களே இவர்கள் ஆட்சி செய்யும் நாட்டிலே நாம் எப்படி நம்பி, பெருந்தொகை களே முதல் போட்டுத் தொழில் நடத்துவது என்று ஐயப்பட்ட அமெரிக்க முதலாளிகள் இங்கு உலா வந்த னர், உரையாடினர், உசாவிப் பார்த்தனர், உண் மையை உணர்ந்துகொண்டனர், உவகையுடன் ஊர் திரும்பி மற்ற முதலாளிகளேக் கூட்டிவைத்து, அஞ் சற்க! அங்கு பேசப்பட்டு வரும் சோஷியலிசம் நம்மை ஒன்றும் செய்யாது. அது குறித்து நாம் அச்சம் கொள்ளத் தேவையில்லே. இந்தியாவிலுள்ள முதலாளி களே அதுபற்றிக் கவலேப்படவில்லே; காங்கிரஸ் பேசும் சோஷியலிசம், ஏழையின் செவிக்கு இனிப்பளிக்கத் தான். வேறு எதற்கும் அல்ல; நாம் நமது 'முதல்' போட்டுத் தொழில் நடத்த ஆரோக்கியமான சூழ்நிலே இந்தியாவிலே அமைந்திருக்கிறது, என்று கூறி யுள்ளனர்.

போன வாரத்திலே, ஜி. எல். மேத்தா, இதனே மேலும் உறுதிப்படுத்தும் விதமாகப் பேசியிருக்கிருர், வாஷிங்டன் நகரில்.

இந்திய முதலாளிகளுடன் கூட்டு சேர்ந்து தொழில் நடத்தும் அமெரிக்க முதலாளிகளுக்கு மேத்தா அன்புரையும் நன்றியுரையும் வழங்கினர். அவர்களிலே குறிப்பிடத்தக்கவர்கள் 67 முதலாளி களாம்.

முதலாளிகளுக்காகஇல்லே காங்கிரசாட்சி; ஏழைக் காகவே இருக்கிறது; பணக்காரரின் கொட்டம் அடக் கப்படும், பாட்டாளியின் வாழ்வு உயர்த்தப்படும் என் றெல்லாம் இங்கே காமராஜர் சோஷியலிசம் பேசுகிருர். அங்கே ஜி. எல். மேத்தா அமெரிக்க முதலாளிகளேக் கூட்டி வைத்து,

> காங்கிரஸ் அரசுமீது சந்தேகம் கொள்ளாதீர்கள்.
>
> தனிப்பட்ட முதலாளிகளின் தொழில் அமைப்புகளுக்குக் காங்கிரஸ் அரசு விரோ தம் காட்டவில்லே.
>
> காங்கிரசாட்சியில், 17 ஆண்டுகளில் தனியார் துறை விரிவடைந்திருக்கிறது, வளம் அடைந்திருக்கிறது. தனியார் துறைக்குக் காங்கிரஸ் அரசு உதவி அளித்து வருகிறது.

என்று எடுத்துக்கூறி, அமெரிக்க முதலாளிகளுக்கு அன்பழைப்பு விடுத்திருக்கிறார்.

> உள்நாட்டு முதலாளிகளை எதிர்த்து, சமாளித்து சோஷியலிசத்தை நிலைநாட்டு வதே கடினமானது என்று விவரம் அறிந்தோர் கவலைகொள்கின்றனர்.

> ஆனால் சோஷியலிசம் பேசிக்கொண்டே காங்கிரஸ் அரசு, பிரிட்டிஷ்-அமெரிக்க முதலாளிகளை இங்கு ஆதிக்கம் செலுத்த அழைக்கிறது. அவர்களும் இங்கு முகாம் அமைத்துக் கொண்டால், சோஷியலிசம் வெற்றிபெறுவது எளிதாக முடியக்கூடியதா!

வெள்ளைக்காரன் காலத்திலே இருந்ததைவிடப் பலத்துடன் இன்று முதலாளி முகாம் இருக்கிறது என்பதை எந்தக் காங்கிரஸ் தலைவரும் மறுக்க முடியாது.

> தன்னை வரவேற்க வந்த காங்கிரஸ் அமைச்சரையே ஒருபுறம் போகச் சொல்லி விட்டு, பிர்லாவுடன் மோட்டாரில் பேசிக் கொண்டே பவனி வந்தாராமே நந்தா கல்கத்தாவில் போனமாதம், அதிலிருந்தே புரிய வில்லையா, முதலாளிகட்கு காங்கிரஸ் அரசிடம் உள்ள பிடிப்பு.

பச்சையாகவே பேசிவிட்டாரே காங்கிரஸ் அமைச்சர் படீல், சுயராஜ்ய போராட்ட காலத்தில் எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய்களைக் காங்கிரசுக்குக் கொடுத்தவர்கள் முதலாளிகள் என்று. மிரட்டும் குரலில் பிர்லாவும் பேசிவிட்டாரே, முதலாளிகளைக் காங்கிரஸ் சர்க்கார் பகைத்துக்கொள்ளக்கூடாது என்று.

இவைகளை எல்லாம் மக்கள் மறந்தேவிடுவார்கள் என்ற எண்ணத்தில், சோஷியலிசம் பேசிச் சுவை ஊட்டப் பார்க்கிறார்கள்.

சோஷியலிசத்தின் அடிப்படை ஒன்றைக்கூட அமைத்துக்கொள்ளாமல், சோஷியலிசத்துக்கு வெடி வைக்கும் போக்கை மாற்றாமல், சோஷியலிசம்பற்றிப் பேசுவது, எப்படிப் பொருளுள்ளதாகும்? என்ன பயனைத் தரும்?

இங்கே சோஷியலிசம் பேசுகிறார் காங்கிரஸ் தலைவர்; பிர்லா அறிவிக்கிறார் சென்றவாரம், அமெரிக்காவிலிருந்து;

> 3,00,000 டன் உற்பத்தி செய்யக்கூடிய தேன் இரும்புத் தொழிற்சாலையை 1967ல் துவக்கப்போவதாக! அமெரிக்க முதலாளியின் கூட்டுறவுடன்!!

> அலுமினியத் தொழிற்சாலையை விரிவு படுத்தப்போவதாக! அமெரிக்கக் கூட்டுறவுடன்.

> உர உற்பத்தித் தொழிற்சாலை விரிவான முறையில்! அமெரிக்கக் கூட்டுறவுடன்!!

அதேபோது இந்தியப் பேரரசின் தொழில் அமைச்சர் சஞ்சீவய்யா,

> தொழிலாளர்களுக்குப் போதுமான வசதிகளைத் தொழில் அமைப்புகள் செய்துதரவில்லை,

என்று தெரிவிக்கிறார்.

பிர்லா புதுத்தொழில் அமைக்கிறார்; தொழிலாளி பழைய வேதனையைத் தொடர்ந்து அனுபவித்துவருகிறான்; காமராஜர் சோஷியலிசம் பேசுகிறார்; நாடு கேட்டுக்கொள்ளவேண்டி இருக்கிறது.

நாடு நம்புகிறதா என்று கேட்கிறாயா, தம்பி! நான் என்னத்தைச்சொல்ல! எதை எதையோ நம்பிக்கிடக்கும் மக்கள் இன்னமும் ஏராளமாக இருக்கிறார்களே!

அனுப்பிய மணியார்டர் வந்து சேர்ந்ததாகக் கடிதம் வருவதற்குள் துடிதுடிக்கும் அதே மக்கள், மேலுலகு சென்றுவிட்ட பெரியவர்களுக்கு, 'திவசம்' செய்வதன் மூலம், பண்டம் அனுப்பிவைப்பதாக நம்பிக்கொண்டிருக்கிறார்களே! எனவேதான் தம்பி! காங்கிரஸ் பேசும் சோஷியலிசம் பதர், நெல் அல்ல என்பதையும், காட்டும் கனிவு வெறும் கபடம் என்பதையும், அமைத்துள்ள முறை முதலாளியைக் கொழுக்கவைப்பது என்பதையும் விளக்கிக் காட்டவேண்டியிருக்கிறது. தெளிவு தேவைப்படும் அளவு இருந்தால், இன்றையக் காங்கிரசில் நடுநாயகர்களாகக் கொலுவிருப்பவர்கள் யாரார் என்பதைப் பார்த்தாலேபோதும், இந்தக் காங்கிரசினால் சோஷியலிசத்தை நடைமுறைக்குக் கொண்டுவர முடியாது என்பதைப் புரிந்துகொள்ள. புள்ளிமான் குட்டிக்குப் புலி பால்தராது என்பதை நான்மட்டுமா, இன்று பூஜைசெய்து வரம்கேட்டுக் கொண்டிருக்கும் தம்பிகளும் சேர்ந்து சொன்னார்கள். விளக்கம்போதும் என்று நாம் இருந்துவிடுவதற்கில்லையே; தெளிவு அரசோச்சும்வரையில் எடுத்துக்கூறியபடி இருந்தாகவேண்டும்.

> காங்கிரஸ் பேசிவரும் சோஷியலிசம், பொருளற்றது; பயனற்றது.

> காங்கிரசின் பேச்சுக்கும் நடத்தைக்கும் பொருத்தம் இல்லை.

என்பது மேலும் மேலும் விளக்கப்பட்டாக வேண்டும்.

## மூன்று பருவங்கள்

வாழ்க்கையில் மூன்று பருவங்கள் உள்ளன.

ஒன்று இளமை! மற்றொன்று இளமையாக இருக்கும் முயற்சியில் ஈடுபடுவது! மூன்றாவது பருவம், இளமையாக இருப்பதாகவே எண்ணிக்கொண்டிருக்கும் பருவம்!!

ஏழைக்காகப் பரிந்து பேசுவது போதும், அதனையே இந்த மக்கள் சோஷியலிசம் என்று ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் உள்ளனர் காங்கிரஸ் தலைவர்கள்.

ஏழைக்காகப் பரிந்து பேசுவதும், ஏழையை வதைக்கும் செல்வவான்களுக்கு அறநெறி, அன்புவழி பற்றிக் கூறுவதும், புதியகண்டுபிடிப்பு அல்ல, மூவர்ண சரக்கும் அல்ல; மிக மிகப் பழையது.

வறுமையால் தாக்குண்டு கிடப்பவர்கள், தெளிவு பெற்று, தமது நிலைமைக்கான காரணம் கண்டறிந்து, உரிமை உணர்வு பெறுகிற வரையில், தானம் தருமம், பரிவு பச்சாதாபம், உதவி சலுகை இவைகளைப் பெற்றுக்கொள்வதில் மகிழ்ச்சிகொள்வர், நன்றியும் கூறிடுவர், இது நல்ல திட்டம் என்றும் ஒப்புக்கொள்வர். ஆனால் பொருளாதாரயந்திர அமைப்பின் தன்மையையும், அதனைச் சமைத்திட்ட அரசியல் அமைப்பின் போக்கையும் விளங்கிக்கொண்ட பின்னர், என்ன கூறுவர்?

இருளது விட்டு வந்துளோம் வெளியே!
அய்யோ பாவம்! எனு மொழி கேளோம்!
ஐயமளித்திடும் கரமது வேண்டோம்!

என்றன்றோ கூறுவர். உரிமை கேட்பர், உதவி அல்ல!

1881-ம் ஆண்டு பிறந்தவர் ஜான் நைஹார்ட் எனும் கவிஞர்; அவர் அந்த நாளிலேயே பாடிவைத்தார், தெளிவுபெற்ற ஏழை, விழிப்புற்ற பாட்டாளி என்னவிதமாகப் பேசுவான் என்பதனை.

"ஆணவக் கோட்டை
அமைத்திடுவோரே!
அடிமைகள் கண்டினி
நடுங்கிடுவீரே!
உலகிடை எழுந்திடும்
போர்கள் எதிலும்
இருப்பவர் யாமே
மறுப்பவருளரோ!
மன்னர் பெற்றிடும்
வலிவனைத்தும்
அளிப்பவர் யாங்கள்
அறிந்திடுவோமே.
ஞானிகளும் மோனிகளும்
முன்பு காட்டிய வழிகண்டு
காலகாலமாயுள கடுந்தளைகளை
உடைத்தெறிந்துமே
உலக இதயமதை
எம் முரசாகக்கொண்டு
இருளது விட்டு
வந்துளோம் வெளியே
அய்யோபாவம்! எனுமொழி
கேளோம்
ஐயமளித்திடும் கரமது
வேண்டோம்
பேரூர் சமைத்தவர்க்கேன்
பிச்சைதானும்!
என்றுதான் புரியுமோ
உமக்கிப் பேருண்மை.
குலப்பெருமை குடிப்பெருமை
விட்டொழிப்பீர்
வார்ப்படப் பொற்கடவுள்
வாணிபமும் விடுவீர்!
அவரவர் பெறும் தகுதி
ஆக்குந்திறன் வழியதாகும்.
உழைப்போர் நாங்கள்
உற்பத்தியாளர்
ஊமைகளாயிரோம்
இனியுந்தானே!
சுரண்டிடுவோரே!
சோம்பிக் கிடந்திடுவோரே!
பரவிப் பாய்ந்து வந்துளோம்
பாரினில்
பொழுது புலர்ந்தது
புவியெங்குமே, காண்!
இருளும் ஒழிந்தது
வாள் வெளிவந்தது.
உறையையும் வீசி
எறிந்தோம் கீழே!

தம்பி! கவிதையிலே குலுங்கிடும் எழுச்சியைக் கண்டனையா! இவ்விதமான எழுச்சி முரசு கேட்டு உலாவந்து, வெற்றிகண்ட முறை சோஷியலிசம்.

இங்கோ, பதர் கொடுத்து நெல்லெனக் கூறிடுவார் போல, அய்யோபாவம்! என்பதனையே சோஷியலிசம் என்று கருதிக்கொள்ளச் சொல்கிறார்கள்.

அவர்கள் கூறிடும் சோஷியலிசத்தில், பொருள் இல்லை; பயன் இல்லை!

பொருளற்றதைப் பேசிடுவதுடன், சொல்லுக்கும் செயலுக்கும் பொருத்தமற்ற முறையில் ஏழைக்காகப் பரிந்து பேசிவிட்டு, ஏழையின் அந்த நிலைமைக்குக் காரணமாக உள்ள முதலாளிகளுடன் கூடிக்குலாவுவதும், அவர்களைக் கொழுக்க வைப்பதுமான செயலில் ஈடுபடுகிறது காங்கிரஸ் கட்சி.

இதனை மெய்ப்பிக்கும் விதமாகவே இருந்திருக்கிறது காமராஜரின் மேடைப் பேச்சும், அவருடன் கூடிக் குலாவியவர்களின் பட்டியலின் தன்மையும். இதனை எடுத்து விளக்கிடவேண்டும். இது வெறும் கிணற்றுத் தண்ணீர்; கங்காதீர்த்தம் என்று கூறுவது ஏமாற்றுப் பேச்சு என்பதனை எடுத்துக் கூறிட வேண்டும்—தொடர்ந்து.

அண்ணன்,

அண்ணாதுரை

# இரத்தமும் கண்ணீரும்

[ மு. அன்புச்செல்வன் ]

அந்தப் பிரசவ வார்டின் முன்புற வாயிலில் குறுக்கும்நெடுக்குமாகக் கவலை தோய்ந்த முகத்துடன் நடந்துகொண்டிருந்தார் வேதநாயகம். அவரால் அந்த நிலையில் நடக்கவும் முடியவில்லை; ஒரே இடத்தில் உட்காருவதென்பதும் அவருக்கு நரக வேதனையாயிருந்தது. அடிக்கொரு தரம் துடிக்கும் மனத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் ஆவலுடன் வார்டின் உட்புறம் தம் பார்வையைச் செலுத்திக்கொண்டிருந்தார். அவரது முகத் தோற்றத்தில்தான் எத்தனைவிதமான உணர்ச்சி பாவங்கள் அலைமோதிக் கொண்டிருந்தன!

வேதநாயகத்திற்கு இப்போது வயது நாற்பத்தைந்துதான். ஆனால் அவரது தோற்றமோ அறுபது வயது கிழவரைப்போல் உருவகப்படுத்தி யிருந்தது. தலை முடியில்கூட இலேசாக நரை விழுந்திருந்தது.

பிரசவ வார்டின் கதவு இலேசாகத் திறந்தது. அங்கே டாக்டர் ஒருவர் ஆழ்ந்த சிந்தனை வயப்பட்டவராய்த் தலைகுனிந்தபடி வந்துகொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் இரண்டு நர்சுகள் ஒரு வண்டியைத் தள்ளிக்கொண்டு வந்தனர். அந்த வண்டியில் பிரசவமாகி, வேதனையின் மயக்கம் தெளியாமலிருந்த இளம் பெண் ஒருத்தியைப் பெண்களின் வார்டுக்குக் கொண்டு சென்றனர்.

வேதநாயகம் பொறுமை இழந்தவராய் டாக்டருக்கு முன்னால் ஓடி, 'டாக்டர்! என் மனைவியின் நிலைமை எப்படியிருக்கிறது? அவளுக்குப் பிரசவமாகிவிட்டதா?' என்று கலக்கத்துடன் கேட்டார். அவரது உடல் ஆடிக் கொண்டிருந்தது.

அந்த டாக்டர் அவருக்கு ஒன்றுமே பதில் சொல்லவில்லை. எதிரிலிருந்த பெண்களின் வார்டுக்குப் பின்னால் இருந்த வண்டித் தொடருக்குச் சென்றுவிட்டார். வேதநாயகத்திற்குத் தன் மனைவி மட்டும் சுகப் பிரசவமாகி வீடு வந்துவிட்டால் போதும். ஆனால், அந்த டாக்டருக்கு...? வேதநாயகத்தின் மனைவியைப் போன்ற எத்தனையோ பெண்களை — தாய்க்குலத்தை அந்த உயிர்ப் போராட்டங்களிலிருந்து காப்பாற்றவேண்டிய கடமை இருந்தது. அந்தக் கடமை, சிறிதுநேரம் நின்று பேசுவதற்குக்கூட அவரை விடவில்லை.

வேதநாயகம் துன்பச் சோர்வுடன் அயர்ந்து உட்கார்ந்துவிட்டார். 'ஆண்டவனே! பெண்களுக்கு ஏன் இப்படிப்பட்ட கொடுமையான தண்டனையைக் கொடுத்துவிட்டாய்? வேதனைப்படாமல் — உயிர்வதை இல்லாமல் அவர்களுக்குக் குழந்தைபிறக்கக்கூடாதா?' அவர் மனம் ஓலமிட்டது.

ஒருவேளை பிரசவமென்பது அவ்வளவு சுலபமாக, உயிர்ப் போராட்டமில்லாமல் நடந்துவிட்டால் பெண்களுக்குக் குழந்தைப் பாசமும், கனிவுண்டும் ஆழமான அன்பும் இல்லாமல் போய்விடுமோ? இந்த ஒரு செயலுக்காகத்தான் தாய்க்குலத்தைத் தியாகச் சமுதாயம் பெருமைப்படுத்துகிறதா? உண்மையில் வேதநாயகம்தான் இப்போது பிரசவ வேதனைப் பட்டுக்கொண்டிருந்தார்!

வேதநாயகம் எட்டுக் குழந்தைகளுக்குத் தந்தையானவர். இப்போது அவரது மனைவிக்குப் பிறக்கப்போவது ஒன்பதாவது குழந்தை. இந்த வயதிலும், இவ்வளவு குழந்தைகளுக்குமேல் இன்னமும் குழந்தை அவசியமா? இருக்கின்ற குழந்தைகள் போதாதா? மற்றவர்கள் இவ்வாறு அவரைக் கேள்விகள் கேட்காமலில்லை. அதனால் பயன்? அவர் அதைப்பற்றி எண்ணிப் பார்க்க வேண்டுமே!

அவர் படித்தவர்தான். பகுத்தறிவுக் கருத்துகளில் ஆழ்ந்து தெளிந்தவர்தான். குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை உணர்ந்தவர்தான் ஆனால் நடைமுறை வாழ்க்கையில்...?

பெண்கள் பிள்ளை பெறுவது இயற்கைதான். ஆனால் அவர்கள் இயந்திரமல்லவே! எலும்பும், தசையும், இரத்தமும் கொண்ட சாதாரண மனித உடலைத் தானே அவர்களும் பெற்றிருக்கிறார்கள். ஆண்டுக்கொரு பிள்ளைபெறுவதென்றால் அவர்களின் உடலுக்கு வலிமை எங்கிருந்து வரும்?

வேதநாயகத்தின் மனைவி கர்ப்பிணியா யிருக்கும் போதே அடிக்கடி சோர்வடைந்தும், களைப்படைந்தும், நோயுற்றும் மிகவும் துன்பப்பட்டு வந்தாள். மருத்துவ மனைக்கு அவள் சோதனைக்குச் செல்லும் சமயங்களில் டாக்டர்கள் அவளைப் பரிசோதித்து அவளுக்கு இரத்தம் குறைவாக இருப்பதாகவும், அதனால் சத்துள்ள நல்ல உணவைச் சாப்பிட வேண்டுமென்றும், கடினமான வேலைகளைச் செய்யக் கூடாதென்றும், இயன்ற அளவு நிறைய ஓய்வு எடுத்துக்கொள்வது நல்லதென்றும் கூறியிருந்தனர்.

டாக்டர்கள் சொன்னபடி சத்துள்ள உணவைச் சாப்பிடுவதற்கு அவர்களிடம் பணமுமில்லை; ஓய்வு எடுத்துக்கொண்டு நிம்மதியா யிருப்பதற்கு வழியுமில்லை. குடும்ப நிலை அப்படி.

இந்தக் காரணங்களால் முறையான பிரசவ காலத்திற்கு முன்பே அவள் பிரசவ வேதனையால் அவதிப்பட்டாள், துன்பப்பட்டாள். வேதநாயகம் துடித்தார்; துவண்டார். அவருக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலிருந்தது. அந்தக் குடும்பத் தலைவிக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால்...? அந்தக் குடும்பத்தின் நிலைமை? எட்டுக் குழந்தைகளின் கதி? அவர் வாய்விட்டு அழவில்லை. பிறருக்குத் தெரியாமல் கண்ணீர் விட்டுப் புலம்பியிருக்கிறார்.

அவள் மருத்துவ மனைக்கு வந்த இந்த இரண்டு வார காலத்தில் அவர் திருப்தியாகச் சாப்பிட்டு எத்தனை நாட்களாகி விட்டன? நிம்மதியாகத் தூங்கித்தான் எவ்வளவு நாட்களாகின்றன? அவர் நிலையிலுள்ள

ஒருவருக்குத்தான் அந்தத் துன்பத்தை உணர்ந்து பார்க்க முடியும்.

இன்று எப்படியாவது குழந்தை பிறந்துவிடுமென்று அன்று காலையில்தான் டாக்டர் வேதநாயகத்திடம் கூறியிருந்தார். அவர் அப்படிச் சொல்லிச் சென்ற பிறகு, ஒவ்வொருவிநாடியும் அவருக்கு வேதனை தரும் யுகமாக இருந்தது.

ஒவ்வொரு முறையும் பிரசவ வார்டின் கதவு திறக்கும்போது வெளியே வரும் டாக்டர்கள், "உங்கள் மனைவிக்கு சுகப்பிரசவமாகி விட்டது" என்ற நல்ல செய்தியைச் சொல்லமாட்டார்களா என்று ஏக்கத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

சிறிதுநேரம் சென்றது. அப்போது ஒரு டாக்டர் மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு வேதநாயகத்தை நோக்கி வந்தார். வேதநாயகத்தின் இதயம் வேகமாக அடித்துக்கொண்டது. வந்தவர், அவருக்கு டாக்டராகத் தோன்றவில்லை. தெய்வத்தைக் கண்டவரைப்போல் தம் கைகளைக் கூப்பிக்கொணடு 'டாக்டர்' என்றார். அதற்குமேல் அவரால் கேட்க நினைத்ததைக் கேட்க முடியவில்லை. உணர்ச்சி மேலீட்டால் அவருக்குத் தொண்டையை அடைத்துக்கொண்டது.

டாக்டர் அமைதியாகச் சொன்னார். 'உங்கள் மனைவிக்குக் குழந்தை பிறந்துவிட்டது' என்று. ஆனால் ...அந்தக் குரல்? அதிர்ச்சியுடன் தலைநிமிர்ந்த வேதநாயகம் டாக்டரின் முகத்தை நோக்கினார். தன்முயற்சியில் வெற்றிபெற்ற ஒருவரின் முகம் அப்படியிருக்காதே? வேதநாயகத்திற்கு இதயத் துடிப்பே நின்றுவிடும் போலிருந்தது. 'டாக்டர்!' அவர் அலறினார்.

டாக்டர் அவருக்கு ஆறுதல் சொல்பவரைப்போல அவரது முதுகில் மெதுவாகத் தட்டிக் கொடுத்தார். 'கவலைப்படாதீர்கள் மிஸ்டர் வேதநாயகம். உங்கள் மனைவிக்கு அப்படி எதுவும் அபாயம் நேர்ந்துவிடவில்லை. பிரசவ அதிர்ச்சியால் மயக்கமாகியிருக்கிறார்கள். இரத்தக் குறைவினால் உடல்நிலை மிகவும் பலவீனமாக உள்ளது. எனவே இப்போது அவர்களுக்கு உடனடியாக இரத்தம் செலுத்தியாக வேண்டும்' என்று டாக்டருக்கே உரிமையான–எந்த நேரத்திலும் தன்னம்பிக்கையை இழக்காத தன்மையுடன் அமைதியாகக் கூறினார்.

வேதநாயகம் அவசரப்பட்டார். தன்னை மறந்த துடிப்புடன், 'டாக்டர் என்னுடைய இரத்தத்தை எடுத்துக்கொள்ளுங்கள். எனக்கு என் மனைவிதான் வேண்டும். என் இரத்தத்தை எடுத்துக்கொண்டு அவளைக் காப்பாற்றுங்கள் டாக்டர்' என்றார்.

டாக்டர் அந்த நிலையிலும் இலேசாகச் சிரித்துக் கொண்டார். 'அவசரப்படாதீர்கள் மிஸ்டர் வேதநாயகம். மத்தியானத்திற்கு மேல்தான் உங்கள் மனைவிக்கு இரத்தம் செலுத்தவேண்டும் நீஙகள் என்னோடு வாருங்கள்' என்று சொல்லிவிட்டு வேறொரு வார்டை நோக்கி டாக்டர் வேகமாக சென்றுகொண்டிருந்தார்.

✻

அந்த மருத்துவ மனையில் இரத்தம் சேமித்து வைக்கும் வார்டில் ஒரு படுக்கையில் வேதநாயகம் படுத்திருந்தார். அவர் உடலிலிருநது டாக்டர் தமக்கு வேணடிய இரத்தத்தை எடுப்பதற்கு முன், சிறு ஊசியால் வேதநாயகத்தின் ஒரு விரலில் குத்தி அந்த இரத்தத் துளியைச் சோதித்துக் கொண்டிருந்தார். ஏனோ அவரது முகம் சிறிது சிறிதாக மாறிக்கொண்டே வந்தது.

வேதநாயகம் டாக்டரைப் பார்த்தார். அவரருகில் வந்த டாக்டர், 'வேதநாயகம், உங்கள் உடலை நீங்கள் வீணாகக் கெடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். இப்போது உங்கள் உடல் இருக்கும் நிலையில், உங்களுக்கே வேறு யாராவது இரத்தம் கொடுக்கவேண்டும் போலிருக்கிறது. அத்துடன் உங்களுடைய இரத்தம் உங்கள் மனைவியின் உடலுக்கு ஒத்துக் கொள்ளாது' என்று சோர்வுடன் கூறினார்.

'டாக்டர்! அப்படியானால் என் மனைவியின் கதி? டாக்டர்! என்னைப் பற்றி எனக்குக் கவலையில்லை. என் மனைவி உயிர் பிழைக்க வேண்டும். என் உடலிலுள்ள இரத்தம் முழுவதையும் வேண்டுமானாலும் எடுத்துக்கொண்டு என் மனைவியைக் காப்பாற்றுங்கள்.' வேதநாயகம வேதனையால் வெந்துருகினார். தனக்காகவும் தன் குழந்தைகளைக் காப்பதற்காகவும் அந்தப் பாசமுள்ள பத்தினி பட்ட பல துன்பங்கள் அவர் மனக் கண்முன் நிழலாடிக் கொண்டிருந்தன.

டாக்டர் அவருக்கு ஆறுதலான ஆலோசனை கூறினார். 'மிஸ்டர் வேதநாயகம! இன்னமும் ஒன்றும் கெட்டுப்போய்விடவில்லை உங்கள் மனைவியைப் பொறுத்தவரையில் காலங்கடந்துவிடவில்லை. இப்போதே நீங்கள் சென்று இரத்தம் கொடுக்கக்கூடிய உங்கள் நண்பர் யாரையாவது அழைத்துவாருங்கள். அதுமுடியவில்லையென்றால் குறிப்பிட்ட ஒரு தொகையைக்கொடுத்தால்தான் மருத்துவமனையில் இரத்தம் கொடுப்பார்கள். மத்தியானததிற்குள் எப்படியாவது இந்த இரண்டில் ஒன்றைச் செய்யுங்கள்.' அந்த நல்ல டாக்டரால் அவ்வளவுதானே செய்ய முடியும்.

ஆனால், வேதநாயகத்தின் நிலைமை? அவருக்கு உலகமே சுற்றிச் சுழன்று, வெடித்துச் சிதறுவதைப் போலிருந்தது. அவருக்காக மனமிரஙகி இரத்தம் கொடுக்கக்கூடிய தியாகமனம் படைத்த அபபடிப்பட்ட நெருங்கிய நண்பர்கள் அவருக்கு யாரிருககிறார்கள்? பணம? உம்...! இந்த இக்கட்டான நேரத்தில் அவரை நம்பி இவ்வளவு பெரிய தொகையைக கொடுக்கக்கூடிய அவ்வளவு பெரிய மனிதர் யார்?

'பணம்–இரத்தம' இவை இரண்டும் இரு கூர்ஈட்டிகளாக மாறி மாறி அவர் இதயத்தைத் துளைத்துக் கொண்டிருந்தன இருந்தாலும் நம்பிக்கையை இழக்காமல் முயற்சியிலீடுபட்டார். நண்பர்கள், தெரிந்தவர்கள்—தெரியாதவர்கள், ஏன் நேற்றுவரை எதிரியாக இருந்தவரிடம்கூட தன்மானத்தைவிட்டு உதவி நாடினார். ஆனால் செய்பவர்யார்? அவருக்கு வேண்டுமானால் மனைவி என்ற பாச உணர்ச்சி இருக்கலாம். அதனால் அந்தத் துடிப்புத் துடிக்கிறார். அது இயற்கை. ஆனால், மற்றவர்களுக்கு அப்படி என்ன அககறை இருக்கப் போகிறது?

வேதநாயகம் சோர்ந்து மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தார்.

தள்ளாடியபடி டாக்டரின் அறையை நோக்கிச் சென்றார் வேதநாயகம். 'எங்கே, யாரையாவது அழைத்து வந்தீர்களா?' டாக்டர்கூட இப்போது அவசரமாகத்தான் கேட்டார்.

'இல்லை டாகடர். நீங்கள் சொன்னபடி என்னால் செயய முடியவில்லை நான ஏழை டாகடர். குழந்தைச் செல்வத்தைத் தவிர வேறு எந்த செல்வமும் எனககுக் கிடையாது டாக்டர்' வேதநாயகம் வாய்விட்டு அழுதார்.

டாக்டர் கையை விரித்துவிட்டார். அவர் மனைவி பிழைத்தால் அது மறுபிறவியாம்! இந்த மனித மனத்தால் எவ்வளவு அதிர்ச்சிகளைத்தான் ஒரு சேர, ஒரே சமயத்தில் தாங்கிக்கொள்ளமுடியும்! வேதநாயகம் மயங்கி விழுந்துவிட்டார்.

✻

வேதநாயகம் மயக்கம் தெளிந்து கண் விழித்த போது, நடந்தது எல்லாமே ஏதோ ஒரு கெட்ட கனவைப்போலிருந்தது. அவரால் எதையுமே நிதானிக்க முடியவில்லை. அவருக்கு நன்றாக சுயநினைவு வந்தபோது, அவரது படுக்கையின் அருகில் டாக்டர் புன்முறுவலுடன் நின்றுகொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் கலங்கிய கண்களுடன் நின்றுகொண்டிருந்த அந்த உருவம்......?

தெளிவில்லாமல் தெரிந்த அந்த உருவம்...? வேதநாயகம் நன்றாகக் கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டார். ஏதோ கனவுபோல் அந்த உருவம் அவரது நினைவுக்கு வருகிறது. அந்த உருவம்? அவன்......

'ராமையா!' வேதநாயகம் அலறினார்.

அந்த ராமையா அமைதியாகப்பேசினார். 'ஆமாம், வேதநாயகம். நான்தான். உன் பழையநண்பன். இளம் வயதிலேயே அன்பு மனைவியை இழந்து தவிக்கும் ராமையா உனக்கு நினைவிருக்கிறதா?'

'நீ...நீ எங்கே எப்படி இங்கு வந்தாய்?' வேதநாயகம் தடுமாற்றத்தால் திணறினார்.

ராமையா வாய் திறப்பதற்குள், டாக்டர் முந்திக் கொண்டார். 'வேதநாயகம்! இன்று இவரால் தான் உங்கள் மனைவியை எங்களால் காப்பாற்ற முடிந்தது. நாங்கள் சிறிதும் எதிர்பாராத நிலையில், இவர் வந்து தமது இரத்தத்தைக்கொடுத்தார். அவருக்கு நீங்கள் நன்றி சொல்லவேண்டும்.'

வேதநாயகம் மனச்சாட்சியோடு போராடினார். 'நன்றியா? அவனுக்கு. நான் சொல்லவேண்டுமா? என் உள்ளத்தைக் கோயிலாக்கி, அதில் அவனைத் தெய்வமாக இருத்திக் காலமெல்லாம் வழிபட்டாலும், எனக்கு நான் செய்த தவறுக்குப் பரிகாரம் கிடையாதே'.

பதினைந்து ஆண்டுகள் இருக்குமா? ஆமாம். அந்த நிகழ்ச்சி நெஞ்சின் அடித்தளத்தில் மாறாமல், மறக்க முடியாமல் இன்றும் உறுத்திக்கொண்டிருக்கிறதே!

❋

அப்போது வேதநாயகம் இளைஞர்; நல்ல உடல் கட்டுடன் வனப்போடு விளங்கினார். நகத்தால் கீறினால் இரத்தம் வரும் என்பார்களே அதுபோன்ற சிவந்த மேனி. திருமணமாகாத அந்த இளம் வயதில் அவர் நன்றாகக் 'கொழு கொழு'வென்றிருந்தார். ராமையா அவரது நண்பர்களில் மிகவும் நெருக்கமானவர். இருவரும் எப்போதும் ஒருவரையொருவர் பிரியாமல் இணைந்தே இருப்பார்கள். எப்படியெல்லாமோ பழகினார்கள்.

அந்தச் சமயம் ராமையாவின் மனைவி பிள்ளைப் பேற்றிற்காக மருத்துவமனை சென்றிருந்தாள். முதல் பிரசவம்; குழந்தையும் பிறந்தது. ஆனால் அதிக இரத்தப்பெருக்கின் காரணமாக இன்றுபோல் அன்றும் ராமையாவின் மனைவிக்கு இரத்தம் கேட்டார்கள் மருத்துவ மனையில். அதேசமயம் ராமையாவின் இரத்தத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாதென டாக்டர்கள் மறுத்து விட்டார்கள். என்ன செய்வார் ராமையா?

உடனே தனது நெருங்கிய நண்பரான வேதநாயகத்திடம் நம்பிக்கையுடன் ஓடிவந்தார். என்ன ஏமாற்றம்! வேதநாயகம் இரத்தம் கொடுக்க மறுத்து விட்டார். எங்கே அதனால் தன்னுடைய உடல்நலம் கெட்டுவிடுமோ என்ற அச்சம் அவருக்கு.

இரத்தத்தைக் கொடுப்பதா! உடம்பு என்னத்துக்கு ஆகும்!! நாளை மறுநாள் விழா — ஆணழகன் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான விழா! அதிலே கலந்துகொள்ள வேண்டுமே! எனக்குத்தான் முதல் பரிசு!! நண்பர்கள் பலரும் கூறுகிறார்கள். எனக்கே கூடத் தான் நம்பிக்கை!!

ஆணழகன் வேதநாயகம்! என்ற தலைப்பிட்டு எல்லா இதழ்களிலும் என்படம் வெளிவரும்! எத்தனை பெருமை, மகிழ்ச்சி, கொண்டாட்டம்!! அவ்வளவும் நாசமாகிவிடுமே இன்று இரத்தம் கொடுத்தால்! மயக்கம்! சோர்வு! ஆபத்தே ஏற்படக்கூடும்! ஆபத்து இல்லை என்றால்கூட, இரத்தம் குறைந்துபோனால், இன்றுள்ள வாலிபமுறுக்குத் தோற்றம், கவர்ச்சிகரமான அழகு, குறைந்துவிடுமே! குறைந்துபோனால், விழாவிலே வெற்றி கிடைக்காதே! ஆணழகன் என்ற சிறப்புப் பட்டம் கிடைக்காதே!

வேதநாயகம் இவ்விதம் எண்ணினான்; இரக்க உணர்வு, நட்புணர்ச்சி மடிந்துவிட்டது! இரத்தம் கொடுப்பதற்கில்லை என்று கூறிவிட்டான்.

அவரது பயம் தெளிவதற்குள் சாவு ராமையாவின் மனைவியைக் கொண்டுசென்றுவிட்டது. ராமையா வேதநாயகத்தைப் பகைத்துக்கொள்ளவில்லை. காலத்தை நொந்துகொண்டு எங்கோ சென்றவர்தான். இன்று அதே காரணத்துக்காகவே சாவுக்கு இரையாகவிருந்த வேதநாயகத்தின் மனைவியைக் காப்பாற்றிவிட்டார்.

வேதநாயகத்தால் வாய்திறந்து பேசமுடியவில்லை. அவர் ராமையாவைச் சேர்த்து அணைத்துக்கொண்டு கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தார்.

மனிதன் மிருகத்திலிருந்தும் சிறிது உயர்வாகக் கருதப்படுவது, அவனிடம் எங்கோ ஒரு மூலையில் மறைந்துகிடக்கும் இந்த ஓர் இரக்க உணர்வால்தானோ? அந்த மனிததன்மையினால்தான் இந்த உலகம் இன்னும் எவ்வளவோ போராட்டங்களிடையேயும் வாழ்ந்து கொண்டிருக்கிறதுபோலும்!

இங்கே? இன்று? எப்படி? என்று தழதழத்த குரலில் கேட்டார் வேதநாயகம். இராமையாவின் முகத்திலே ஒரு தனிப்பொலிவு மலர்ந்தது! விழாவுக்காக வந்தேன்—என்றான்.

விழா என்ற சொல்லைக் கேட்டதும், வேதநாயகத்தின் இதயத்திலே பலமான சம்மட்டி அடி விழுவது போலிருந்தது. அதை உணர்ந்துகொண்டார் போலிருக்கிறது இராமையா; "வள்ளலார் விழா, வேதநாயகம்" என்று கூறினார்.

"இந்த வருஷம், விழாவுக்கான விருந்துக்காக, காய்கறி தருவதாக ஒப்புக்கொண்டிருந்தேன்; அதைக் கொடுத்துவிட்டுவரப் போயிருந்தேன், அங்குதான் இவரைப் பார்த்தேன்..." என்றார் டாக்டர்.

"வேதநாயகம்! வள்ளலார் விழாவுக்கான விருந்துக்காகத் தர என்னிடம் பணம் ஏது! நானோ பராரி...... அன்று முதற் கொண்டு...ஆனால் அன்று முதல், மாதத்துக்கு ஒருமுறை, இரத்ததானம் கொடுப்பதை என் விரதமாக்கிக் கொண்டேன்! டாக்டரிடம் பேசும் வாய்ப்புக் கிடைத்தது; வந்தேன், என் கடமையைச் செய்தேன், சென்றுவருகிறேன்." என்று இராமையா கூறியபோது வேதநாயகம் கண்களில் நீர் துளிர்த்தது.

"நாளையத்தினம் விழாவிலே பேசவேண்டும் என்கிறார்களே! இரத்தம் கொடுத்திருக்கிறீர்களே, களைப்பு, மயக்கம் இருக்குமே, பேச முடியுமா..." என்று கனிவுடன் டாக்டர் கேட்டார்.

"ஒரு உயிரைக் காத்திட என் இரத்தம் கொடுத்த எண்ணம் போதாதா டாக்டர், என் பேச்சுக்கு உயிரூட்டம் தர;" என்று கேட்டார் இராமையா.

வேதநாயகம் அவருடைய காலில் வீழ்ந்தார்; தன் கண்ணீரைக் காணிக்கையாக்கினார். ❋

# வினா-விடை

(1) பல அதிசயங்களைப் பற்றிக் கூறுகிறீர்களே, உங்களுக்கு எது பெரிய அதிசயம் என்று தோன்றுகிறது?

பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரம், எகிப்து நாட்டின் பிரமிட் என்று பல அதிசயத்தைக் கூறுகிறார்கள். எனக்கு இவைகளைவிடப் பெரிய அதிசயமாகப் படுவது, முந்திரா ஊழல் விசாரணை நடத்தி, டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் பேச்சு முழுவதும் நம்பத்தக்கதாகத் தெரியவில்லை என்று அறிவித்த ஜட்ஜு சக்ளாவும், அதே டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரும் இப்போது ஒன்றாக காங்கிரஸ் அமைச்சர்களாகக் கொலுவிருக்கிறார்களே அதுதான்.

(2) ஆங்கில மொழிக்கு இனி எதிர்காலம் கிடையாது; வளர்ச்சி கிடையாது என்கிறார்களே, உண்மையாகவா?

எனக்கு அப்படித் தோன்றவில்லை. ஆங்கிலத்தை 8-வது வகுப்பிலிருந்து மட்டுந்தான் சொல்லிக் கொடுக்க முடியும் என்று கண்டிப்பாக இருந்து வந்த குஜராத் மாநிலத்திலேயே இப்போது ஆங்கிலத்தை 5-ம் வகுப்பிலிருந்து சொல்லிக் கொடுக்கப் போகிறார்களாம்! 1960-ம் வருஷத்துக் கணக்குப்படி, ஆங்கில ஏடுகளின் தொகை 11 லட்சத்துக்கும் அதிகமாமே!

(3) செல்வம் பெருக வேண்டும்; ஏழையின் வாழ்வு உயரவேண்டும்; வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்ற நோக்கம் சிலாக்கியமானது தானே? அந்த நோக்கத்தைக் கூறுவது காங்கிரஸ் கட்சிதானே?

சிலாக்கியமான நோக்கம், சந்தேகமே இல்லை. ஆனால் அந்த நோக்கத்தைக் காங்கிரஸ் கட்சிதான் கண்டுபிடித்துக் கூறியது என்று எண்ணிக்கொள்வதுதான் தவறு.

இந்தியாவினுடைய பொருளாதாரச் சக்திகளைத் தக்க முறையில் பயன்படுத்தி, ஒரு சிலரின் செல்வத்தை வளரச் செய்ய அல்ல, பெரும்பாலோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவேண்டும். வறுமையிலிருந்துஏழையை விடுவித்து, பாதுகாப்பு அளிக்க வேண்டும். நலிவைப் போக்கிப் புதுவலிவு பெறச் செய்யவேண்டும்; அறியாமையைப் போக்கித் தெளிவு அளிக்கவேண்டும். வளர்ச்சியின் வேகம், இரட்டை மாட்டு வண்டியின் வேகம் போன்றதாக இருத்தல் கூடாது; குறைந்த அளவு, ஜீப் மோடார் வேகத்தின் அளவாவது வளர்ச்சி வேகம் இருக்கவேண்டும்.

இது நல்ல நோக்கந்தானே! நேர்த்தியான முறையிலே நோக்கம் கூறப்பட்டிருக்கிறது அல்லவா! இதைக் கூறியது யார் தெரியுமா? வெள்ளைக்கார வைசிராய்! எப்போது? 1944-ல்!!

(4) இப்போது காங்கிரசாட்சியில் ஆயிரக் கணக்கான கோடி ரூபாய் செலவிட்டுத் திட்டம்போட்டு நடத்துகிறார்களே அதுபோல வெள்ளைக்கார ஆட்சி செய்திருக்க முடியுமா?

நிச்சயம் செய்திருக்க முடியாது. காங்கிரசாட்சி போடும் வரிபோல வெள்ளைக்கார ஆட்சி போட்டு, இவ்வளவும் திட்டச் செலவுக்காக என்று சொன்னால் காங்கிரசார் சும்மாவா இருந்திருப்பார்கள்! கசக்கிப் பிழிகிறான்—உயிரை உறிஞ்சுகிறான்—இரத்தத்தைக் குடிக்கிறான் என்று கண்டித்துப் பேசி மக்களைக் கிளப்பிவிட்டிருப்பார்களே! எல்லாம் உங்கள் நன்மைக்காகத்தான், திட்டம் போட்டு உங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தத்தான் என்று வெள்ளைக்காரன் காரணம் சொன்னால் மட்டும், நம்பிவிடுமா நாடு! காங்கிரசார் சொல்லமாட்டார்களா, பசுவைக் கொன்று செருப்பு தானமா என்று! திட்டச் செலவுக்காக இப்போது பல ஆயிரம் கோடி ரூபாய்களை வெளிநாடுகளிலே காங்கிரசாட்சி வாங்குகிறதே அதுபோல வெள்ளைக்கார ஆட்சி, பக்ரா-நங்கலுக்காக, நெய்வேலிக்காக, தாமோதர் அணைக்கட்டுக்காக என்று காரணம் காட்டிக் கடன் வாங்கியிருக்க முடியுமா! போச்சு! போச்சு! இந்தியாவே அடியோடு போச்சு! அடகு வைத்துவிட்டான் அனியாயக்காரன்! எப்படி எப்போது இவ்வளவு பெரிய கடனைத் திருப்பிக் கட்டுவது! முடியாது. கடன் கொடுத்த நாடுகள் இந்தியாவை ஆளுக்குக் கொஞ்சமாகப் பங்கு போட்டுக் கொள்ளப் போகிறார்கள் என்று காங்கிரசார் தூற்றித் துளைத்தெடுத்து விட்டிருக்கமாட்டார்களா! அதைத் தெரிந்துதான் வெள்ளைக்காரன் அதிக செலவுள்ள எந்தத் திட்டமும் போடவில்லை. பயம்!

5. மைசூரில் போட்டிக் காங்கிரஸ் ஏற்பட்டதற்கு ஜாதி ஒரு காரணமாமே, உண்மையா?

ஓரளவு உண்மைதான். ஏனெனில் போட்டிக் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஒக்கிலிகர் வகுப்பு; முதலமைச்சராக உள்ள காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா லிங்காயத் வகுப்பு. மைசூரில் இந்த இரண்டு வகுப்புகளுக்கும் ஆதிக்கப் போட்டி உண்டு. இப்போது லிங்காயத்துகள் ஆட்சி; இதிலே ஒக்கிலிக வகுப்புக்கு நியாயம் கிடைக்கவில்லை என்ற பேச்சும் அங்குபலமாக அடிபடுகிறது.

✽

# PICK THE BEST PICK




# fruitnik

**[NON-AERATED-FRUIT BEVERAGE]**

**MANGO-GRAPE-APPLE-PINEAPPLE-COCKTAIL.**

**Fruitnik Products**

MADRAS-COIMBATORE.


சின்னகாஞ்சிபுரம் 88, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது ஆசிரியர் சி. என். அண்ணாதுரை